2019/2020

ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

# O Level தமிழ்

## வினாத்தாள் 2

### பயிற்சி 3

பெயர் ________________________________


*www.readingtamilschool.co.uk*

*admin@readingtamilschool.co.uk*

1. **பின்வரும் பந்தியை ஆங்கிலத்தில் மாற்றி எழுதவும்.**

ஒரு சிறுவன் வார முடிவில் தன் அப்பா பந்து வாங்க மறந்து போனதால் அப்பாவிடம் மிகவும் கோபமாக இருந்தான். தன் வேலை முடிவதற்கு முன்னால் கடையை மூடிவிடுகின்றனர் என்று அப்பா பையனிடம் சொன்னார். பையன் உடனே அப்பா எப்பொழுதும் தன் வேலையில் எல்லாம் மறந்து விடுவார் என்று கத்தினான். அப்பா பையனுக்கு ஆறுதல் சொல்லி அடுத்த நாள் காலையில் கடைக்குப் போகலாம் என்று சொன்னார். பையன் காலை உதைத்துக் கொண்டு, கதவை படார் என்று சாத்தி விட்டுத் தூங்கப்போனான்.

அடுத்த நாள் காலை பையன் கோபத்துடன் எழுந்து காலைச் சாப்பாடு சாப்பிட்டு விட்டுத் தயாராக இருந்தான். இரண்டு பேரும் சேர்ந்து நகரில் புதிதாகத் திறந்த விளையாட்டு சாமான்கள் விற்கும் கடைக்குப் போனார்கள். கடைக்காரர் பையனிடம் வந்து பெயர் என்ன என்று கேட்டார். "ஓ நீ தானா இன்று காலையில் வந்த முக்கியமான பந்தை வாங்கும் பையனா?" என்று கேட்டார். பிறகு மேசையின் மேல் அவன் பெயர் போட்ட ஒரு பாக்கெட்டைத் (பொட்டலத்தைத்) திறந்த பொழுது அதற்குள் சர்வதேச விளையாட்டுக்காரர்கள், தொலைக்காட்சியில் விளையாடும் பந்து மாதிரி ஒன்று இருந்தது.

றெடிங் தமிழ் கல்விக்கூடம் - O Level தமிழ்

__________

__________

__________

__________

__________

__________

__________

__________

__________

__________

2. **தமிழில் மாற்றி எழுதவும்.**

The young parents were tired. Their baby was waking up twice a night and their four-year-old son got up early every day and wanted to play. The father left for work at 7.30 each morning to catch the train to his office. He always finished at 5 o'clock in the evening and arrived home at 6pm. After five sleepless nights, his wife was exhausted. Both parents were arguing frequently.

One morning, the father fell asleep on the train and accidentally leaned on the shoulder of the man who was sitting next to him. The father woke and apologised. The man asked why he was so tired. The father explained about his children. The man laughed and said that he had had the same problem. He mentioned a lady who had helped them for a few hours each day allowing his wife to sleep in the afternoon. He gave the telephone number to the father. The couple contacted the helper and with her help, they were able to cope.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - O Level தமிழ்

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - O Level தமிழ்

**Section B – Reading Comprehension**

Read the following passage carefully and then answer, briefly and in **Tamil**, **Questions 1–09**. You should use your own words as far as possible.

ஒரு தாய் தன்னுடைய வாழ்க்கை ஒழுங்காகப் போய்க் கொண்டு இருக்கிறது என்று நினைத்தாள். இப்பொழுது பெண் குழந்தைக்கு ஒரு வயது ஆகிறது. இரவில் பல மணித்தியாலங்களுக்குத் தூங்குகிறாள். தாய் சில மணி நேரங்களுக்கு பகுதி நேர வேலை செய்ய எடுத்துக் கொண்டாள். குழந்தை பிறப்பதற்கு முன்னால் ஒரு நிறுவனம், பத்திரங்கள் சரியாக இருக்கிறதா என்று பார்க்கும் வேலையை வீட்டிற்கு ஈ மெயில் மூலமாக அனுப்பினார்கள். பத்திரங்கள் ஒவ்வொன்றையும் சரியாக இருக்கிறதா என்று பார்த்து அடுக்கி வைத்து திரும்பவும் ஈ மெயிலில் அனுப்புவாள். இப்பொழுது குழந்தை கொஞ்சம் வளர்ந்த படியால், திரும்பவும் வீட்டிலிருந்து தன்னுடைய கணணியில் வேலை செய்ய ஆரம்பித்தாள்.

அவள் கீழே இருந்த அறையில் இருந்து கொண்டு வேலை செய்தாள். அந்த அறையிலிருந்து மாடிக்குப் போவதற்கும் படிகள் இருந்தன. அந்தத் தாய், குழந்தை மாடிப்படியின் அருகில் போவதைக் கவனித்தாள். பிறகு முதல் படியைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். குழந்தை மாடிப்படியில் ஏற ஆரம்பித்தால், தாய்க்கு வேலை செய்வது கஷ்டம் என்று தெரியும். முதலில் தாய் இரண்டாவது படியில் சில தலையணைகளைப் போட்டாள். சில நாட்களுகள் ஒரு முழங்காலை முதல் படியில் மடித்துக்கொண்டு நின்றாள். சீக்கிரத்தில் தலையணைகளை ஒரு பக்கம் தள்ளிவிட்டு, ஒரு கையால் இரண்டாவது படியைத் தொட்டாள். தாய் தன் திட்டத்தை மாற்றி, இரண்டு பைகள் நிறைய மளிகை சாமன்களை வாங்கிக் கொண்டு வது இரண்டாவது படியில் வைத்தாள். குழந்தைக்கு பை மிகவும் கனமாக இருந்த படியால், அதைத் தள்ள முடியவில்லை. கொஞ்ச நாட்களுக்குத் தாயால் தன் வேலையைச் செய்ய முடிந்தது. வாரக் கடைசியில் தாய் வேலை செய்து கொண்டிருக்கும் போது, குழந்தையின் சத்தமே கேட்கவில்லை என்று திரும்பிப் பார்த்தாள். ஒரு பையில் மா இருந்தது. அதைத்திறந்து தன் உடம்பு தலையெல்லாம் போட்டுக்கொண்டிருந்தாள். ஒரு பை திறந்த படியால் இரண்டாவது பையையும் திறந்து தானியங்களையும் எடுத்தாள்.

தாய் இன்னொரு திட்டம் போட வேண்டும் என்று நினைத்தாள். ஏனென்றால் குழந்தை நல்ல பலத்துடனும் புத்திக் கூர்மையுடனும் இருந்தாள். வாரக் கடைசியில், தாய் தன் குழந்தையை மாடிப்படியில் ஏறச்

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - O Level தமிழ்

சொல்லிவிட்டு, விழுந்தால் பிடிப்பதற்கு கீழே நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். இப்பொழுது குழந்தை நாலைந்து படிகள் ஏறுகிறாள். சில சமயங்களில் மேலே போய் நின்று திரும்பிப் பார்க்கிறாள். கீழே விழுவதைப் பற்றி கவலைப் படவில்லை. சில சமயம் கொஞ்சம் அழுவாள். ஆனால் திரும்பவும் படிகளில் ஏறத் தொடங்குவாள். அம்மா என்ன செய்வது என்று திகைத்தாள்.

அடுத்த கிழமை தினமும் வேலையை முடித்துக் கொடுக்க வேண்டியிருந்தது. மாடிப்படியை மூடி வைத்தால் குழந்தை கத்துவாள் என்று தெரியும். பல தலையணைகளைக் கொண்டு வந்தாள். மேலே மாடிப்படிகளில் போடுவதற்கு பதிலாக படிகளின் கீழே போட்டாள். அவள் தன்னுடைய வேலை செய்யும் இடத்தையும் உட்காரும் இடத்தையும் குழந்தையும் மாடிப்படியையும் பார்க்கிற மதிரி போட்டுக்கொண்டாள். முதல் நாள் அம்மா வேலை செய்வதைப் பார்த்து விட்டு மேலே ஏறிப் போனாள். ஒரு பக்கம் திரும்பி அம்மாவைப் பார்க்கும் போது அவள் தடுக்கிக் கீழே இருக்கும் தலையணையில் விழுந்து விட்டாள். அவள் சிரித்து விட்டு திரும்பவும் மாடியில் ஏறப் போனாள். தாய் தனக்குள்ளே சிரித்துக் கொண்டு தன்னுடைய வேலையை முடிப்பதில் கவனமாக இருந்தாள்.

1. இந்தப் பத்தியில் குழந்தையின் வயது என்ன?

________________________________________

________________________________________

2. தாய் என்ன வேலை செய்தார்?

________________________________________

________________________________________

3. தாய் எப்படி இந்த வேலை செய்கிறார்?

________________________________________

________________________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் O Level தமிழ்

4. குழந்தை மாடிப்படியில் ஏறாமல் இருக்க் தாய் என்ன செய்தார்?

5. தாயின் திட்டம் ஏன் பலிக்கவில்லை?

6. வார முடிவில் தாய் பார்த்துக் கொண்டிருக்கும் போது குழந்தை என்ன செய்தது?

7. கடைசியில் தாய் என்ன செய்தார்?

8. அடுத்த வாரம் (கிழமை) குழந்தை முதல் நாள் என்ன செய்தது?

9. தாய் கடைசியில் என்ன செய்தாள்?

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - O Level தமிழ்